19.2.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

தமிழக அரசின் வேளாண் பொறியியல் துறையின் சார்பில், செய்யூர் தொகுதிக்கு உள்பட்ட விவசாயிகள் 15 பேருக்கு ரூ. 12.18 லட்ச மதிப்பிலான வேளாண் கருவிகளை எம்.எல்.ஏ. ராஜு அண்மையில் வழங்கினார்.

### "அம்மா' பண்ணைமகளிர் குழுவுக்கு தொழில் மேம்பாட்டு பயிற்சி

வத்தலகுண்டு வட்டாரம் சேவுகம்பட்டியில் வேளாண்மைத் துறை சார்பில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் அம்மா பண்ணை மகளிர் குழுவுக்கு வட்டார அளவிலான தொழில் மேம்பாட்டு பயிற்சி புதன்கிழமை நடைபெற்றது. அதில் வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, பட்டு வளர்ச்சித் துறை, மீன்வளத் துறை ஆகிய உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பாக பயிற்சியளிக்கப்பட்டது. வத்தலகுண்டு வட்டார புதுவாழ்வுத் திட்ட (வாழ்வாதாரத் திட்டம்) பயிற்சியாளர் கலையரசி பண்ணை மகளிர் குழுவுக்கு பயிற்சியளித்தார். வத்தலகுண்டு வேளாண்மை உதவி இயக்குநர் அ. கோபால்ராஜ் மற்றும் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமைத் திட்ட அலுவலர்கள் ஒருங்கிணைந்து இந்த பயிற்சியை நடத்தினர்.

### பெருந்துறையில் ரூ. 85 லட்சத்திற்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 85 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது. பெருந்துறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகள் 1,909 மூட்டைகளில், 90,000 கிலோ கொப்பரையை

ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 94.80-க்கும், அதிகபட்சமாக ரூ. 99.25-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 54.25-க்கும், அதிகபட்சமாக ரூ. 93.90-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 85 லட்சத்துக்கு ஏலம் மூலமாக வர்த்தகம் நடைபெற்றது. இந்த தகவலை சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

## "சாமை பயிரிட்டால் அதிக லாபம்'

சாமை பயிரிட்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என வேளாண்மைத் துறையின் உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி கூறினார். ஆரணியை அடுத்த விண்ணமங்கலம் கிராமத்தில், பயிரிடப்பட்ட நிலத்தை அண்மையில் அவர் ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது: முதுகு வலிக்கு சாமை ஒரு நல்ல உணவு என்பதால், சாமை பயிருக்கு எப்போதும் சந்தையில் வரவேற்பு உண்டு. எனவே, இதைப் பயிரிட்டால் எப்போதும் சந்தை வாய்ப்பு உண்டு. சாமைப் பயிர் சாகுபடிக்கு ஏற்ற மாதம் பிப்ரவரி ஆகும். ஒரு ஏக்கருக்கு விதையளவு 5 கிலோ தேவைப்படும். கலப்பையைப் பயன்படுத்தி, வரிசையில் விதைப்பு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 2 டன் தொழு உரத்தை கடைசி உழவின் போது பரப்பு உழவு செய்ய வேண்டும். மேலும், அடியுரமாக ஒரு ஏக்கருக்கு 17.6 கிலோ தழைச் சத்தும், 8.8 கிலோ மணிச் சத்தும் இட வேண்டும். விதைத்த 20-ஆவது நாளில் வரிசைக்கு வரிசை 22.5 செ.மீ இடைவெளியும், செடிக்குச் செடி 7.5 செ.மீ இடைவெளி இருக்கும்படிக் களைய வேண்டும். இப்படிச் செய்வதால் அதிகமாகத் தூர்கள் வரும். கதிர்கள் அதிகம் வரும். இந்தப் பயிரை பொதுவாக எந்த நோயும் தாக்குவதில்லை. குருத்து ஈ சாமையைத் தாக்கி விளைச்சலை மிகவும்

பாதிக்கிறது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த விதைப்பைத் தள்ளிப் போடாது பருவ மழை தொடங்கிய உடனே விதைக்கலாம் என்றார்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மாதம்தோறும் நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: திருவள்ளூர் மாவட்ட மாதாந்திர விவசாயிகள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை, மின் வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண் விற்பனை, வணிகத் துறை, இதர வேளாண் சார்ந்த அனைத்துத் துறை அலுவலர்களும் பங்கேற்று விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் முழு அளவில் பங்கேற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கூடுதல் லாபம் தரும் இயற்கை விவசாய முறை நெல் சாகுபடி



இயற்கை விவசாய முறையில் நெல் சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகள் கூடுதல் லாபம் அடைவது மட்டுமன்றி மண் வளத்தையும் பாதுகாக்க முடியும் என்கிறார் காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (உழவியல்) முருகன்.இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: பல்வேறுபட்ட கால நிலைகள், மண் வகைகளில் நெல்பயிர், அதைச் சார்ந்த பயிர் சுழற்சி முறையை கடைப்பிடித்து

வருவதால், அதிக அளவில் ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் உபயோகப்படுத்த வேண்டியுள்ளது. இதன் விளைவாக மண்வளம், மகசூல் குறைகிறது. நிலத்தடி நீர் மாசு, சுற்றுப்புற மாசு ஏற்பட வாய்ப்புள்ளது. இந்தக் குறைபாடுகளில் இருந்து விடுபடுவதற்கு இயற்கை வேளாண்மை சிறந்த வழிமுறையாக உள்ளது. அதிலும் உலக அளவில் நெல்லை உணவுப் பயிராகப் பயன்படுத்துவதால், இயற்கை முறையில் நெல் சாகுபடி மிக, மிக அவசியமாகிறது. இயற்கை நெல் சாகுபடி என்பது, செயற்கை உரங்களையோ, பூச்சிக்கொல்லி மருந்துகளையோ பயன்படுத்தாமல் இயற்கை சார்ந்த எருக்கள், பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாள வேண்டும். இயற்கை வேளாண்மையில் உற்பத்தி செய்யப்படும் நெல்லுக்கு வெளிநாடு, உள்நாட்டில் நல்ல வரவேற்பு உள்ளது. மேலும் உடல் நலம் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே அதிகரித்து வருவதால், பெருநகரங்களில் இயற்கை வேளாண் விளை பொருள்களுக்காக தனியாகக் கடைகள் தொடங்கப்படுவதோடு, கூடுதல் விலை கொடுத்து வாங்குவதற்கும் மக்கள் தயாராகி வருகின்றனர். எனவே இயற்கை முறையில் நெல் உற்பத்தி செய்தால், விவசாயிகள் கூடுதல் லாபம் அடைவது மட்டுமல்லாமல், மண் வளத்தையும் பாதுகாக்கலாம். நெல் சாகுபடிக்கேற்ற இயற்கை வேளாண் தொழில் நுட்பங்கள்: இயற்கை வேளாண்மையில் நல்லத் தரமான சன்ன ரகங்களான வெள்ளைப் பொன்னி, ஆடுதுறை 43, 45, 49, கோ-51, பூச்சி, நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட ரகங்களை உபயோகப்படுத்தினால் நல்ல மகசூல் கிடைப்பதோடு கூடுதல் விலையும் பெற முடியும். இயற்கை சாகுபடி முறையில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளை உபயோகிக்க வேண்டும்.

**விதை நேர்த்தி:** விதை நேர்த்தி செய்வதற்கு ரசாயன பூச்சிக் கொல்லிகளைத் தவிர்த்து உயிர் உரங்கள், தாவரம் சார்ந்த பொருள்களைப் பயன்படுத்த வேண்டும். 1 கிலோ விதைக்கு 20 கிராம்

அசோஸ்பைரில்லம், 10 கிராம் பாஸ்போ பாக்டீரியா, சூடோமோனாஸ் என்ற அளவில் உபயோகித்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.இவ்வாறு செய்வதால், இளம் பயிரில் நோய் எதிர்ப்புத் திறன் அதிகரித்து மண் வழியில் பரவும் நோய்கள் தவிர்க்கப்படும். நாற்றாங்கால் தயாரிப்பு: நாற்றாங்கால் தயாரிப்புக்கு 1 சென்டுக்கு 100 கிலோ தொழு உரம், 50 கிலோ மண் புழு உரம், 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு போன்றவற்றை உபயோகப்படுத்த வேண்டும்.

**நடவுப் பணி**: நடவு வயலில் கடைசி உழவின்போது, 1 ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இட வேண்டும். அல்லது நடவு வயலில் நடுவதற்கு முன்பு பசுந்தாள் உரப் பயிர்களான தக்கைப் பூண்டு, சணப்பை, கொழுஞ்சி விதைகளை 20 கிலோ விதைத்துப் பிறகு 45 நாள்கள் கழித்து பூக்கும் தருணத்தில் மடக்கி உழ வேண்டும். அவ்வாறு செய்யும்போது 10 டன்கள் வரை பசுந்தாள் உரங்கள் கிடைப்பதோடு, 50 முதல் 80 கிலோ வரை தழைச் சத்தும் கிடைக்கிறது. பண்ணையில் காணப்படும் வேம்பு, புங்கம், கிளைசிரிடியா, செஸ்பானியா, சூபாபுல், மரத்தின் சிறுக் கிளைகளை உடைத்து வந்து சரியான ஈரப் பதத்தில் நிலத்தில் நன்கு மட்கும்படி மடக்கி உழ வேண்டும். பசுந்தாள் உரப் பயிர்களை வளர்க்க முடியாவிட்டால், 1 ஏக்கருக்கு 5 டன் மண் புழு உரம் போடலாம். சூடோமோனாஸ், உயிர் பூஞ்சானக் கொல்லியை ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து வயலில் நடுவதற்கு முன்பாக இட வேண்டும். நடவு வயலில் அசோஸ்பைரில்லம் 10 பாக்கெட், பால்போ பாக்டீரியா 10 பாக்கெட் ஆகியவற்றை 25 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். அசோலா உயிர் உரத்தை 1 ஏக்கருக்கு 100 கிலோ என்ற அளவில் நடவு செய்த 3 முதல் 5 நாள்களுக்குள் இட்டு, நன்கு வளர்ந்த அசோலாவை (20 நாள்கள் கழித்து) கோனோவீடர் மூலம் நன்கு அழுத்தி விடுவதால், வயல்களுக்கு தழைச்

சத்து உரமாகக் கிடைக்கிறது. களை எடுக்கும் கருவிகளான கோனோவீடர் அல்லது ரோட்டரி கருவி ஆகியவற்றைக் கொண்டு நடவு செய்த 15 நாள்கள் முதல் 10 நாள்களுக்கு ஒரு முறை களை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதால் களைகள் குறைந்து மண் காற்றோட்டம் அடைவதுடன், வேரின் வளர்ச்சியும் அதிகரிக்கிறது. நடவு வயலில் மேல் உரமாக 1 ஏக்கருக்கு 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு, பயிர் தூர் தட்டும் பருவத்தில் போட வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு முறைகள்:** இயற்கை நெல் சாகுபடியில் பூச்சி, நோய் மேலாண்மை 1 சவாலாக விளங்குகிறது. இருந்த போதிலும் ரசாயனப் பூச்சிக் கொல்லி அல்லாத ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை ஆரம்பத்தில் இருந்து ஒழுங்காக கடைப்பிடிப்பதால், பூச்சி, நோய்களை வெகுவாகக் கட்டுப்படுத்தலாம். கோடை உழவு செய்வதால், மண்ணில் உள்ள பூச்சிகளின் கூட்டுப் புழுக்கள் அழிக்கப்படுகின்றன. வரப்பில் உள்ள களைகளை சுத்தமாக வெட்டிவிட வேண்டும். சரியான முறையில் நீர்ப் பாசனம் செய்வதுடன் தகுந்த வடிகால் வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும். அதிக அளவில் தழைச்சத்து இடாமல் இருக்க வேண்டும். இனக் கவர்ச்சி பொறி, விளக்குப் பொறி வைத்து பூச்சிகளின் நடமாட்டம், எண்ணிக்கையைக் கண்காணித்து தகுந்த கட்டுப்பாடு முறைகளைக் கையாளுதல் வேண்டும். இயற்கை முறையில் கிடைக்கக் கூடிய தாவர வகைப் பூச்சி மருந்துகள், உயிரியல் பூச்சி நோய்த் தட்டுப்பாட்டுக் காரணிகளைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம். பசுவில் இருந்து கிடைக்கக் கூடிய 5 பொருள்களான சாணம், கோமியம், பால், தயிர், நெய் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் பஞ்சகவ்யா (3 சதவீதம்) இலை வழி ஊட்டமாக தெளிக்க வேண்டும். குருத்துப் புழு, இலைச் சுருட்டுப் புழு கட்டுப்படுத்தும் முறை: 5 சதவீதம் வேப்பங்கொட்டைச் சாறு தெளிக்க வேண்டும். ட்ரைக்கோடெர்மா ஜப்பானிக்கம் என்ற ஒட்டுண்ணி அட்டையை ஏக்கருக்கு 2 சி.சி. அளவில் 1 வார

இடைவெளியில் 3 முறைக் கட்ட வேண்டும். பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் உயிரியல் காரணியை ஏக்கருக்கு 400 கிராம் வீதம் தெளிக்க வேண்டும். தத்துப்பூச்சி, சாறு உறிஞ்சும் பூச்சி கட்டுப்படுத்துதல்: சரியான அளவு தழைச் சத்து இட வேண்டும். காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். 5 சதவீதம் வேப்பங்கொட்டை சாறு அல்லது 2 சதவீதம் வேப்ப எண்ணெய் தெளிக்க வேண்டும்.

**குலை நோய் கட்டுப்படுத்துதல்**: வரப்பில் உள்ள களைகளை முற்றிலுமாக அகற்ற வேண்டும். அதிகமான அளவு தழைச்சத்து இடக் கூடாது. எதிர் சக்தி கொண்ட கோ-47 ரகம் சாகுபடி செய்ய வேண்டும். சூடோமோனாஸ், உயிரியல் காரணி ஆகியனவற்றை நடவு செய்த 45-ஆம் நாள் முதல் 10 நாள்கள் இடைவெளியில் 0.2 சதவீதத்தில் 3 முறை தெளிக்க வேண்டும். இலையுறை அழுகல், இலையுறை கருகல், பாக்டீரியா இலை கருகலை கட்டுப்படுத்தல்: சூடோமோனாஸ், உயிரியல் காரணி ஆகியவற்றை நடவு செய்த 45-ஆம் நாள் முதல் 10 நாள்கள் இடைவெளியில் 0.2 சதவீதம் என்ற வீதத்தில் 3 முறை தெளிக்க வேண்டும். 5 சதவீதம் வேப்பங்கொட்டைச் சாறு அல்லது 2 சதவீதம் வேப்ப எண்ணெய் தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 50 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடவேண்டும். பசுவின் சாணம் 20 சதவீதம் கரைசலை நோய் புலப்படும் தருணத்தில் 15 நாள்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும். இதுகுறித்து மேலும் விவரங்களுக்கு காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையத்தை 044 - 2745 2371 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் உதவிப் பேராசிரியர் முருகன்.

# <u>சத்தான கால்நடைக்கு கம்பு நேப்பியர் ஒட்டுப் புல்!</u>



விவசாயிகளின் வாழ்வாதாரமாக விளங்கும் கால்நடைகளுக்கு சத்தான தீவனமாகவும், கால்நடை வளர்ப்பில் உப தொழிலாகவும் கம்பு நேப்பியர் ஒட்டுப் புல் விளங்குகிறது. எனவே விவசாயிகள் தங்களது கால்நடை களுக்கு கம்பு நேப்பியர் ஒட்டுப் புல்லை தீவனமாகக் கொடுத்து சத்துள்ளவையாக மாற்றலாம் என கால்நடை பராமரிப்புத் துறையினர் கூறியுள்ளனர். தமிழகத்தில் கால்நடை வளர்ப்பு என்பது உழவுத் தொழிலின் உப தொழிலாக உள்ளது. பொதுவாக கால்நடைகளுக்கு வைக்கோல், சோளம், கம்பு, மக்காச் சோளத்தின் தட்டை, வேர்க்கடலை கொடி ஆகியவை முக்கிய உணவாக வழங்கப்படுகிறது. ஆனால் கால்நடைகளை சத்தானதாகவும், உற்பத்தித் திறன் பெருக்க வேண்டும் என்றால் சத்தான தீவனம் அளிக்க வேண்டும். அந்த வகையில் கால்நடைகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது கம்பு நேப்பியர் ஒட்டுப் புல், தீவனப் புல் வகையில் குறைந்த இடத்தில் குறைந்த காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய தன்மை கம்பு நேப்பியர் புல்லுக்கு உண்டு. இது கம்பு, நேப்பியர் ஆகிய 2 புல் இனங்களை ஒட்டு சேர்த்து உருவாக்கப்படுவது. கம்பு நேப்பியர் ஒட்டுப் புல்லின் சிறப்புகள்: அதிக தூர்கள், சாயத் தன்மையுடன் இருத்தல், மிக மிருதுவான இனிப்பான சாறு நிறைந்த தண்டுகள், அதிக இலை தண்டு விகிதம், பூச்சி, நோய் தாக்குதல் அற்றது. ஆண்டுக்கு ஏழு மறுதாப்பு பயிர் அறுவடைக்கு ஏற்றது. இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரி ஒருவர் கூறியது: கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் என்பது கால்நடைகளுக்கு சிறந்த சத்தான தீவனமாகும். இதனை குறைந்த செலவில் உப பயிராக விவசாயிகள் இட்டு பயனடையலாம். நல்ல நீர்ப்பாசன வசதி இருந்தால் இப்புல்லை ஆண்டு முழுவதும் நடவு செய்யலாம். நன்கு உழுது தயார்

செய்த நிலத்தில் 50 சென்டி மீட்டர் இடைவெளியில் பாத்தி அமைத்து, பார்த்திகளின் சரிவில் 50 சென்டி மீட்டர் இடைவெளியில் ஒரு கரணை என நடவு செய்ய வேண்டும். இதுபோல் நடவு செய்தால் ஒரு ஹெக்டேருக்கு 40 ஆயிரம் விதைக் கரணைகள் தேவைப்படும். வயலில் கரணைகளை நடவு செய்யும் முன் 1 ஹெக்டேருக்கு 110 கிலோ யூரியா, 310 கிலோ சூப்பர், 68 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை அடி உரமாக இடவேண்டும். இதே அளவு உரங்களை ஆண்டுக்கு ஒருமுறை இட்டு வந்தால் நீண்ட நாள்களுக்கு அதிக மகசூல் பெறலாம் என்றார்.

## <u>சூரியகாந்தி விளைச்சல்: விவசாயிகள் மகிழ்ச்சி</u>



கடந்த ஆண்டைவிட நிகழாண்டில் சூரியகாந்தி அதிகமாகப் பூத்துள்ளதால் விளைச்சல் அதிகமாக இருக்கும் என்று விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருத்தணியை அடுத்த டி.வி.புரம், முருக்கம்பட்டு, பொன்பாடி காலனி, மேல் முருக்கம்பட்டு, டி.புதூர், கீழாந்தூர், தாழவேடு, தும்பிகுளம், மத்தூர், பட்டாபி ராமபுரம், கீழந்தூர், அருங்குளம், சுற்றியுள்ள 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் கடந்த பல ஆண்டுகளாக மலர்ச் சாகுபடியில் ஈடுபட்டு வந்தனர். கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் பருவ மழை தவறியதால் விழா நாட்களில் பூக்கள் அதிக விலைக்கு விற்பனை ஆகவில்லை. இந்த நிலையில், குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரக் கூடிய எண்ணெய் வித்துப் பயிரான சூரிய காந்தியை 20-க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்டனர். இதுகுறித்து முருக்கம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பரமசிவம் கூறியதாவது: சூரியகாந்தி வளர்வதற்கு முழுமையான சூரிய வெளிச்சம் தேவை. இது வளம் மிக்க, ஈரமான மண்ணில் நன்கு வளரும். வர்த்தக ரீதியான சாகுபடியில், விதைகளை 45 செ.மீ. இடைவெளியிலும் 2.5 செ.மீ. ஆழத்திலும் விதைக்கிறோம். கடந்த

ஆண்டு சூரியகாந்தி செடிகளுக்கு ஒருவகையான நோய் தாக்குதல் ஏற்பட்டு ஒரு செடிக்கு 4 பூக்கள் வரை மட்டுமே பூத்தன. ஆனால் நடப்பாண்டில் ஒவ்வொரு செடியிலும் 5 முதல் 8 பூக்கள் வரை பூத்துள்ளன. இதனால் கடந்த ஆண்டைவிட நடப்பாண்டில் சூரியகாந்தி விளைச்சல் அதிகமாக இருக்கும் என்றார்.

**<u>தானிய சேமிப்புக் கிடங்கு திறப்பு</u>**

சங்கராபுரம் அருகே அ.பாண்டலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் தானிய சேமிப்புக் கிடங்கு மற்றும் கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் க.காமராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் (பொறுப்பு) ராமன், ஒன்றியக்குழுத் தலைவர் எஸ்.எஸ்.அரசு முன்னிலை வகித்தனர். வங்கித் தலைவர் கோ.குசேலன் வரவேற்றார். விழாவில் ஊரகத் தொழில்துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ப.மோகன் கலந்துகொண்டு, ரூ.12.50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட தானிய சேமிப்புக் கிடங்கு மற்றும் ரூ.6.90 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட வங்கி நவீன கட்டடத்தைத் திறந்து வைத்தார். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.54 லட்சம் மதிப்பிலான கடனுதவிக் காசோலைகளை வழங்கினார். ஒன்றியக்குழு துணைத் தலைவர் ஆர்.திருமால், வங்கிச் செயலர் ஏ.ராமச்சந்திரன், துணைத் தலைவர் வெ.கண்ணன், ஊராட்சித் தலைவர் பூங்காவனம் அண்ணாமலை உள்ளிட்டோர்கலந்துகொண்டனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நெல் கொள்முதல் நிலையங்களுக்கு 703 டன் வரவு! விலை கட்டுபடியால் விவசாயிகள் ஆர்வம்

ராமநாதபுரம் : கூட்டுறவுத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் மாவட்டத்தில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் செயல்படும் நேரடி கொள்முதல் நிலையங்களில் ஆர்வமுடன் விவசாயிகள் நெல் மூடைகளை விற்று வருகின்றனர். ராமநாதபுரம் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 827 மி.மீட்டர். அதை விட கடந்த ஆண்டு 15 சதவீதம் (947 மி.மீ.,) அதிகளவு மழை பெய்தது. வைகை ஆற்றில் திறந்துவிடப்பட்ட தண்ணீரால், கண்மாய்கள், குளங்கள் ஓரளவிற்கு நிரம்பியது. இதன் மூலம் ராமநாதபுரம், ஆர்.எஸ்.மங்கலம், திருவாடானை, கமுதி, பரமக்குடி, முதுகுளத்தூர் பகுதி கிராமங்களில் நெல் விவசாயம் சுறு சுறுப்படைந்தது. கடந்த ஜனவரி 2 வது வாரத்தில் இருந்து பரவலாக நெல் அறுவடை பணி துவங்கி யுள்ளது. விவசாயிகளின் நெல்லுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் 50 இடங்களிலும், கூட்டுறவுத்துறை சார்பில் பரமக்குடி, செல்வநாயகபுரம், கமுதி, தடுத்தலான் கோட்டை, பார்த்திபனூர், ஆர்.எஸ்.மங்கலம் ஆகிய 6 இடங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில் சேமிக்கப்படும் நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு அனுப்பப்படுகிறது.

கூட்டுறவுத்துறை இணை பதிவாளர் ஆரோக்கிய சுகுமார் கூறியதாவது: மாவட்டத்தில் ஒரு லட்சம் எக்டேர் பரப்பளவிற்கு மேல் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தற்போது, அறுவடை பணிகளில் மும்முரமாக உள்ளனர். விவசாயிகள் நலன் கருதி கூட்டுறவுத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நேரடி நெல் கொள்முதல்

நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயி களிடமிருந்து ஒரு கிலோ நெல் ரூ.14.70 வீதமும், ஒரு மூடை (40 கிலோ ) ரூ.1,470 க்கும் கொள்முதல் செய்கிறோம். பிப்., 9 முதல் 17 வரை 390 விவசாயிகளிடமிருந்து 703 டன் நெல் கொள்முதல் செய்துள்ளோம், என்றார்.

**வேளாண் இயந்திரம் மானிய விலையில் வழங்ககி.கிரி., மாவட்டத்துக்கு ரூ.8.82 லட்சம் ஒதுக்கீடு**

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படும் என, கிருஷ்ணகிரி வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் வேணுகோபால் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 2014-15ம் நிதியாண்டில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நவீன வேளாண் கருவிகள் பயன்பாட்டினை அதிகரிக்கும் நோக்கத்துடன், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி பிரிவு சார்ந்த விவசாயிகளுக்கு அதிகபட்சமாக, 50 சதவீதம் வரை மானியமாக வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்படவுள்ளது.இதில், பலவகை தானிய கதிர் அடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம், ஆர்ச்சர்ட் ஸ்பிரேயர், விசைத்தெளிப்பான், பவர்டில்லர், உழுவை கருவிகள், டிராக்டர் மற்றும் பவர் டிரில்லர் மூலம் இயங்கும் உபகரணங்கள், சுழற் கலப்பை, தீவனப்புல் வெட்டும் கருவி, மரம் அறுக்கும் கருவி ஆகியவை வழங்கப்படும். இந்த கருவிகளுக்கு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி பிரிவு சார்ந்த விவசாயிகளுக்கு மானியம் வழங்க கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு, 8 லட்சத்து, 82 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.எனவே, இந்த திட்டத்தில் பயனடைய விரும்பும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவை சார்ந்த விவசாயிகள் பெயர் மற்றும் முகவரி, சர்வே எண், சிட்டா, அடங்கல்

ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கலாம்.இத்திட்டம் தொடர்பான விவரம் பெறவும், விண்ணப்பிக்கவும் கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி தாலுகாவை சேர்ந்த விவசாயிகள் "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 311, பேஸ் 1, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், மகளிர் காவல் நிலையம் அருகில், கிருஷ்ணகிரி' என்ற முகவரியிலும், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவை சேர்ந்த விவசாயிகள் "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு, சானசந்திரம், ஓசூர்' என்ற முகவரியிலும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## <u>மருந்து தெளிப்பில் நவீன முறை</u>

திண்டுக்கல் : தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிப்பதில் திண்டுக்கல் மாவட்ட விவசாயிகள் நவீன முறையை பின்பற்றி வருகின்றனர். மா மரங்களை பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாக்க பூ பூக்கும் தருவாயில் 2 தடவை பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க வேண்டும். கடந்த காலங்களில் மா மரங்களுக்கு"கை பம்ப்' மூலம் மருந்து தெளிக்கப்பட்டு வந்தது. இந்த முறையில் மருந்து தெளிக்க 4 நபர்கள் வரை தேவைப்படும். ஒரு நாளைக்கு ஒரு ஏக்கர் மட்டுமே தெளிக்க முடியும். தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் நவீன முறையில் விவசாயிகள் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து வருகின்றனர். இதற்கு செலவு குறைவு என்பதால் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதில் டிராக்டரில் மோட்டாரை பொருத்தி, அதிலிருந்து 2 குழாய்களை இணைத்து மருந்து தெளிக்கப்படுகிறது. இதன்மூலம் 8 மணி நேரத்தில் 10 ஏக்கர் வரை தெளிக்க முடியும். இதற்கு 2 பேர் இருந்தால் போதும். மருந்து தெளிக்கும் தொழிலாளி ப.லட்சுமணன் கூறியதாவது: நவீனமுறையில்

அழுத்தம் அதிகமாக கிடைப்பதால் மருந்து மரத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பரவும். இதனால் பூச்சி தாக்குதல் எளிதில் கட்டுப்படுத்தப்படும். இந்த முறையில் 10 ஏக்கருக்கே ரூ.3,500 மட்டுமே செலவாகும். "கை பம்ப்' முறைக்கு ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் வரை செலவாகும். என்றார்.

## விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் ஒன்றியம் நாரணமங்கலம் கிராமத்தில் எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் பனைக்கான தேசிய இயக்க திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மணிலா பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுாப்பு குறித்த பயிற்சி நடந்தது. ஊராட்சி தலைவர் சாந்தி தனகோட்டி தலைமை தாங்கினார். துணை வேளாண் அலுவலர் சாந்தலட்சுமி வரவேற்றார். ஒன்றிய கவுன்சிலர் லட்சுமிபரசுராமன், துணை தலைவர் பரமேஸ்வரி சரவணன் முன்னிலை வகித்தனர். உதவி வேளாண் இயக்குனர் பெரியசாமி பயிற்சியளித்தார். உதவி வேளாண் அலுவலர்கள் வெங்கடேசன், ரகுபதி, ஊராட்சி செயலாளர் திருமலை, ராமச்சந்திரன் கலந்து கொண்டனர்.

## சிறுதானிய பயிர்கள் சாகுபடி பயிற்சி

ஆண்டிபட்டி : விதை கிராம திட்டத்தில் ஆண்டிபட்டியில் சிறு தானிய பயிர்கள் சாகுபடிக்கான பயிற்சி முகாம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. உதவி இயக்குனர் பெரியசாமி தலைமை வகித்தார். விதைச்சான்று முறைகள், விதைச்சான்று தொழில் நுட்பங்கள் குறித்து விதைச்சான்று அலுவலர் ரவி விளக்கினார். மண் மாதிரிகள் எடுப்பது, மண் மாதிரி எடுப் பதன் முக்கியத்துவம், மண்ணில் உள்ள சத்துக்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி அலுவலர் கோபிநாத் சிறு தானிய விதைகளில் விதை நேர்த்தி செய்தல், உயிர் உர நேர்த்தி குறித்து செயல் விளக்கம் காண்பித்தார்.சிறு தானிய பயிர்களான கம்பு, கேழ்வரகு, சோளம், குதிரைவாலி, சாமை, வரகு,

பனிவரகு, தினை போன்றவற்றின் முக்கியத்துவம், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நூறு விவசாயிகள் பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் செல்வம், கோபிநாத் ஆகியோர் செய்திருந்தனர்.

## இலவச கோமாரிநோய் தடுப்பூசி

சேலம்:"சேலம் மாவட்டத்தில், இலவசமாக கோமாரி தடுப்பூசி, மார்ச், 1 முதல் போடப்படும்' என, கலெக்டர் மகரபூஷணம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:சேலம் மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் ஆவின் இணைந்து, 6,03,050 கால்நடை களுக்கு இலவசமாக கோமாரி நோய் தடுப்பூசி போடப்படவுள்ளது. இப்பணிக்காக, சேலம் மமாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும், 200 கால்நடை மருத்துவக் குழுக்கள், கால்நடை மருத்துவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பணி மார்ச், 1 அன்று துவங்கப்பட்டு, அனைத்து பகுதிகளிலும், 21 தேதிக்குள் முடிவடையும். மேலும், தடுப்பூசி போடப்படும் பகுதிகளில், முன்கூட்டியே தெரிவிக்கப்படும்.மேலும், கால்நடைகள் கருவுற்றிருந்தாலும், தடுப்பூசி போடுவதால், எந்த பாதிப்பும் ஏற்படாது. எனவே, பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "வெள்ளை கழிச்சல்' நோயை தடுக்கநாட்டுக் கோழிகளுக்கு "தடுப்பூசி'

சேலம்: சேலம் மண்டல இணை இயக்குனர் ராமலிங்கம் வெளியிட்ட அறிக்கை: கோழிகளுக்கு ஏற்படும் நோய்களில் மிக தீவிரமானது வெள்ளை கழிச்சல் நோய். இந்நோய் "வைரஸ்' கிருமியால் ஏற்படும் தொற்று நோய் வகையை சேர்ந்தது. கோடை காலங்களில், குறிப்பாக வீட்டில் வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகளுக்கு இந்நோய் கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.இதனை தடுக்கும் வகையில் சேலம் மாவட்டத்தில்

உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் இலவசமாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கோடை காலத்துக்கு முன்பு "2 லட்சத்து 10 ஆயிரம்' கோழிகளுக்கு இலவசமாக தடுப்பூசி போட திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் இந்த அறிய வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## <u>நாமக்கல்லில் விவசாய குறைதீர் கூட்டம்</u>

நாமக்கல்:"விவசாய குறைதீர் கூட்டம், வரும், 27ம் தேதி, மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது' என, மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், வரும், 27ம் தேதி, காலை, 10.30 மணிக்கு, மாவட்ட கலெக்டர் தலைமையில் விவசாய குறைதீர் கூட்டம் நடக்கிறது. விவசாய அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்று, அரசின் திட்டங்கள் தொடர்பான ஆலோசனை, புகார், கோரிக்கை தொடர்பாக மனுக்கள் வழங்கலாம்.பின், அதுதொடர்பாக, நிவாரணம் பெறலாம். எனவே, விவசாயி மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் நடத்துவோர், குறைதீர் கூட்டத்தில் பங்கேற்று பயனடைய வேண்டும். மற்றபடி, நிலம் தொடர்பான விவகாரங்கள், வரும், 25ம் தேதி, காலை, 10.30 மணிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடக்கும் கூட்டத்தில் பங்கேற்று, கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்

## இன்றையவேளாண் செய்திகள்

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் கலெக்டர் சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 19ம்தேதி கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் காலை 11 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் சண்முகம் தலைமை வகிக்கிறார். இதில் வேளாண் துறை அதிகாரிகள் மற்றும் சார்புதுறை அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, குறைகளை மனுக்களாக கூட்டத்தில் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

### சேலம் மார்க்கெட்டில் ஒன்றரை கிலோ எடையுள்ள மெகா தேங்காய் ரூ50க்கு விற்பனை

சேலம், : சேலம் மார்க்கெட்டில் ஒன்றரை கிலோ எடையுள்ள மெகா சைஸ் தேங்காய் ரூ50க்கு விற்கப்படுகிறது. தமிழகத்தில் கொங்கு மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் தேங்காய் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த மண்டலத்திற்கு உட்பட்ட சேலம் மார்க்கெட்டில் ஒன்றரை கிலோ எடை கொண்ட மெகா சைஸ் தேங்காய் விற்பனைக்கு வந்துள்ளது. ரூ40முதல் ரூ50வரை விற்கப்படும் இந்த தேங்காயை வாங்கிச் செல்ல பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இது குறித்து தேங்காய் வியாபாரி ஆறுமுகம் கூறியதாவது: பொதுவாக கேரளாவில் சாகுபடி செய்யப்படும் தேங்காய்கள், பிற மாநில தேங்காயை விட அளவில் பெரிதாக இருக்கும். இதற்கு அங்குள்ள மண்வளமே காரணம். சேலம் கெங்கவல்லி பகுதியில் அது போன்ற தேங்காய்கள்

இருப்பதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து அங்கிருந்து ஆயிரம் தேங்காய்களை விற்பனைக்காக சேலம் மார்க்கெட்டுக்கு கொண்டு வந்தோம். சாதாரண தேங்காயின் எடை மட்டையுடன் ஒரு கிலோ, உரித்தால் அரை கிலோ என்ற அளவில் இருக்கும். இந்த மெகா தேங்காய் மட்டையுடன் 4கிலோ, உரித்தால் ஒன்றரை கிலோ என்ற அளவில் உள்ளது. இந்த தேங்காய் ரூ40 முதல் அதிகபட்சமாக ரூ50வரை விற்கப்படுகிறது. பொதுமக்கள் இதனை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

## <u>பெரியார் பல்கலை. சார்பில் சுய உதவிக்குழுவினருக்கு காளான் வளர்ப்புப் பயிற்சி</u>

ஓமலூர், : பெரியார் பல்கலைக்கழக தாவரவியல் துறை சார்பில் மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு, காளான் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஓமலூர் அருகே கோட்டகவுண்டம்பட்டி சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, தாவரவியல் துறைத் தலைவர் முருகேஷ் தலைமை வகித்தார். காளான் வளர்ப்பிற்கான எளிய நடைமுறைகள், காளானை மதிப்பு கூட்டப்பட்ட பொருறீட்களாக மாற்றுவது குறித்து மகளிர் சுயஉதவிக்குழுக்களைச் சேர்ந்த 75 பெண்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. முகாமில் பங்கேற்ற பெண்களுக்கு, பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் அங்கமுத்து, சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்ச்சியில் தாவரவியல் துறை உதவி பேராசிரியர்கள் முருகேசன், அருள்பாலச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## <u>தாராபுரம் அருகே அலங்கியத்தில் நெல் கொள்முதல் நிலையம் துவக்கம்</u>

தாராபுரம், : தாராபுரம் அடுத்துள்ள அலங்கியத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையம் துவங்கப்பட்டது. தாராபுரம் பகுதியில் அமராவதி பழைய ஆயக்கட்டுப் பாசனத்தில் தற்போது நெல் அறுவடை

செய்யப்பட்டு வருகிறது. விலை வீழ்ச்சியை கட்டுப்படுத்த உடனடியாக அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் துவங்கப்பட வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் முற்கட்டமாக தாரா புரம் அடுத்துள்ள அலங்கியம் ஒழுங்குமுறை விற்ப னை கூடத்தில் நேற்று நெல் கொள்முதல் நிலையம் துவங்கப்பட்டது. நிகழ்ச்சி க்கு வருவாய் கோட்டாட்சியர் சரவணமூர்த்தி தலைமை தாங்கி னார். வட்டாட்சியர் ஆறு முகம் முன்னிலை வகித் தார். சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி துவ ங்கி வைத்தார். ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ரமேஷ், அலங்கியம் பாசன சங்கத் தலைவர் ஈஸ்வரமூர்த்தி, தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் பழனிச்சாமி, மற்றும் நுகர்பொருள் வாணிப கழக இணை மேலாளர் மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கடந்த 4 ஆண்டுகளாக அலங்கியத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. பொதுவாக தாராபுரம் பகுதியில் அமைக்கப்படும் அனைத்து நெல் கொள் முதல் நிலையங்களிலும், அதிகாரி விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதை விட வியாபாரிகளிடமி ருந்து கொள்முதல் செய்வது தான் அதிகமாக இருந்து வருகிறது. அரசு நிர்ணயித்துள்ள தொகை யை முழுமையாக வழங்குவதில் லை. இந்த ஆண்டு இது போன்ற தவறுகள் நடைபெறாமல் இருக்கவும், முறை யான கொள்முதல் நடத் தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வருவாய் கோட்டாட்சியரிடம் விவசாயிகள் வேண்டுகோள் வைத்தனர். மேலும் தாராபுரம் பகுதியில் கொளிஞ்சிவாடி, சின்னப்புத்தூர் மற்றும் தளவாய்பட்டிணம் ஆகிய பகுதியில் விரைவில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

<u>திருச்சி மாவட்டத்தில் மேலும் 18 இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள்நாளை முதல் திறப்பு</u>

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் மேலும் 18 நேரடி கொள்முதல் நிலையங்கள் கூடுதலாக நாளை முதல் திறக்கப்பட உள்ளது. இது குறித்து கலெக்டர் பழனிசாமி கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் சம்பா சாகுபடியை முன்னிட்டு கடந்த 9ம்தேதி முதல் தொட்டியம், காட்டுப்புத்தூர், பெட்டவாய்த் தலை, குழுமணி, நவலூர்குட்டப்பட்டு, முத்தரசநல்லூர், நகர், பூவாளூர், லால்குடி, அன்பில், வெள்ள னூர், புஞ்சைசெங்கேந்தி, பெருவளநல்லூர், குண சீலம், முசிறி ஆகிய இடங்களில் 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நெல்வரத்து அதிகமானதால் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மேலும் கூடுத லாக லால்குடி வட்டத்தில் புள்ளம்பாடி, செம்பரை, வெங்கடாசலபுரம், விரகா லூர், ஆலம்பாடி மேட்டூர், கோவண்டாகுறிச்சி, கல்வி குடி, ஆலம்பாக்கம், நத்தமாங்குடி, திண்ணியம், கோமாகுடி, முள்ளால், அரி யூர், திண்ணக்குளம், நத்தம், காட்டூர், வெங்கடாசலபுரம் ஐஐ, வெங்கடாசலபுரம் ஐஐஐ ஆகிய 18 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நாளை (19ம்தேதி) முதல் திறக்கப்பட்டு நெல் கொள் முதல் செய்யப்பட உள்ளது. திருச்சி மாவட்ட விவசாயி கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறி னார்.விலை எவ்வளவு? சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,410 மற்றும் ஊக்கத்தொகை ரூ.60ம் சேர்ந்து ரூ.1,470 வழங்கப்படும். பொது ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,360 மற்றும் ஊக்கத்தொகை ரூ.50ம் சேர்த்து ரூ.1,410 வழங்கப்படும். கொள்முதலுக்கான தொகையை விவசாயிகள் அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப ரொக்கமாகவோ அல்லது அவர்களுடைய வங்கி கணக்கின் மூலமாகவோ வழங்கப்படும்.

## நேரடி கொள்முதல் நிலையத்தில் நெல் விற்று பயன்பெறலாம் விவசாயிகளுக்கு அழைப்பு

பெரம்பலூர், : தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்து விவசாயிகள் பயனடைய வேண்டும் என கலெக்டர் தெரிவித்துள்ளார். பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ்அகமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் காரீப் பருவம் 2014-15ம் ஆண்டில் குன்னம் தாலுகாவில் ஒகளூர், நன்னை, வேப்பந்தட்டை தாலுகாவில் அரும் பாவூர், இனாம்அகரம் ஆகிய 4 இடங்களில் கடந்த ஜனவரி மாதம் 28ம் தேதி நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட்டு செயல்பட்டு வருகிறது. இதுவரையிலும் 84 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கொள்முதல் செய்த நெல்லுக்கு இதுவரை ரூ. 12.5 லட்சம் வழங்கப் பட்டுள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மின்னணு எடைத் தராசு மூலம் எடையிட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லுக்கு சரியான எடையைக் கணக்கிட்டு, முழுமையான விலையைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. இதன்படி, கிரேடு 'ஏ' ரக நெல், குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1,470ம், பொது ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 1,410ம் வழங்கப்பட்டு வருகிறது. நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் நெல் விற்பனைசெய்த அன்றே உடனுக்குடன் அதற்கான தொகை பட்டுவாடா செய்யப்படுகிறது. எனவே பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் அறுவடைசெய்த நெல்லினை மேற்கொண்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனைசெய்து பயன்பெறலாம் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## செட்டிக்குளத்தில் 23 டன் சின்னவெங்காயம் ரூ.2.51 லட்சத்திற்கு ஏலம்

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 23டன் சின்ன வெங்காயம் ரூ.2.51 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது.

இதுகுறித்து பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்திருப்பதாவது : பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் திறந்த முறைஏலம் நடத்தப்பட்டது. இதில் சத்திரமனை, அம்மாபாளையம், நக்கசேலம், மாவிலிங்கை, இரூர், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர், சீதேவி மங்கலம், பொம்மனப்பாடி ஆகியக் கிராமங்களைச் சேர்ந்த 96விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்தனர். இதில் திருச்சி, பாவூர்சத்திரம், பாண்டிச்சேரி, செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், சத்திரமனை, பொம்மனப்பாடி, தேனூர், சீதேவிமங்கலம், ஆலத்தூர் ஆகிய பகுதிக ளைச் சேர்ந்த 11 வியாபாரிகள் 352மூட்டை, அதாவது 23,642கிலோ சின்ன வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். இந்த ஏலத்தில் சின்னவெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ.15.50க்கும், விதைவெங்காயம் அதிகபட்சமாக கிலோ ரூ.26க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ.11க்கும் விற்பனையானது. இதன்மூலம் ரூ.2.51 லட்சத்திற்கு சின்னவெங்காயம் விற்பனை நடைபெற்றது. ஏலம் முடிந்தவுடன் அனைத்து விவசாயிகளுக்கும் பணம் உடனடியாக வழங்கப்பட்டது. இவ்வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழ மைகளில் திறந்தமுறை ஏலம் நடைபெற்று வருகிறது. எனவே விவசாயிகள் தங்களது வெங்காய விளைபொருளை நன்கு சுத்தப்படுத்தி, தரம்பிரித்து ஏலத்திற்கு காலை 10மணிக்குள் கொண்டுவந்து விற்பனை செய்து பயன்பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## <u>நீடாமங்கலம் பகுதியில் 250 ஏக்கரில் பருத்தி சாகுபடி பணிகள் தீவிரம்</u>

நீடாமங்கலம், : நீடாமங்கலம் பகு தியில் சம்பா, தாளடி அறுவடை முடியும் தருவாயில் உள்ள நிலையில், சுமார் 250 ஏக்கரில் பருத்தி சாகுபடி பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. திருவாரூர் மாவட்டம்

நீடாமங்கலம் வேளாண் கோட்டத்தில் சம்பா மற்றும் தாளடி நெல் அறுவடை முடியும் நிலையில் உள்ளது. முன்கூட்டியே நடவு செய்த வயல்களில் சிலர் உளுந்து, பயறு தெளித்துள்ளனர். சிலர் மின் மோட்டார் மூலம் கோடை சாகுபடியை தொடங்கியுள்ளனர். சில இடங்களில் பருத்தி சாகுபடியை விவசாயிகள் தொடங்கியுள்ளனர். இந்த ஆண்டு பருத்தி சாகுபடி நீடாமங்கலம் வேளாண் கோட்டத்தில் சுமார் 250 ஏக்கர் நிலத்தில் விறுவிறுப்பாக நடை பெற்று வரு கிறது. இது தொடர்பாக நீடா மங்கலம் வேளாண் இணை இயக்குனர் இளஞ்செழியன் கூறுகையில், நீடாமங்கலம் வேளாண்மை கோட்டத் தில் தற்போது பன்னிமங்கலம், ஒரத்தூர், வையகளத் தூர், நன்மங்கலம், ரிஷியூர், அனுமந்தபுரம், பெரம்பூர், ஒளிமதி உள்ளி ட்ட பல்வேறு கிராமங்களில் பருத்தி விதை போடும் பணி தொடங்கி விறுவிறுப்பாக நடை பெற்று வருகிறது. தற்போது நெல் தரிசுக்கு ஏற்ற பருத்தி ரகங்களான எம்.சி.யு-7, எஸ்.வி.பி.ஆர்-3, ஆங்சலி விதை களை வேளாண்மைதுறை பரிந்துரை செய்துள்ளது. இந்த ரக விதைகள் ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் பஞ்சு நீக்கிய விதை ஏக்கருக்கு 3 கிலோ 75 செ.மீட்டருக்கு 30 செ.மீட் டர் இடை வெளியிட்டு போட வேண்டும். வீரிய ஒட்டு ரகம் ஏக்கருக்கு 1 கிலோ 120 செ.மீட்டருக்கு 60 செ.மீட்டர் இடை வெளியில் குழிக்கு மூன்று அல்லது இரண்டு விதைகள் இட்டால் போதுமானது. தற்போது விவசாயிகள் வீரிய ஒட்டு பருத்தி விதை ரகமான ஆர்.சி.எச்-2, 659,துளசி-144, துளசி சோ சோவ், பயோ சீட் யுவா, பாராஸ் பிரம்மா, டெல்டா பைன்-6121, யு.எஸ்-4746 உள்ளிட்ட பல அதிக லாபம் தரக்கூடிய வீரிய பருத்தி விதை ரகத்தை விரும்பி சாகுபடி செய்து வருகின்றனர். இவ்வாறு இளஞ்செழியன் கூறினார்.

**<u>திருவாரூரில் நடப்பாண்டு 7 லட்சம் மெ.டன் நெல் கொள்முதல் இலக்கு</u>**

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு சம்பா சாகுபடி 1 லட்சத்து 48 ஆயிரத்து 693 ஹெக்டேரில் நடைபெற்றது. இதில் 25 ஆயிரத்து 950 ஹெக்டேரில் செய்யப்பட்டுள்ள தாளடி பயிரினை தவிர மற்ற பயிர்கள் அனைத்தும் தற்போது அறுவடை நடைபெற்று வருகிறது. கடந்த 2011-12 ஆண்டில் மாவட்டத்தில் அதிக பட்சமாக 6 லட்சத்து 65 ஆயிரம் மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. அந்த ஆண்டை போன்று நடப்பாண்டிலும் விளைச்சல் அதிகமாக இருப்பதால் 7 லட்சம் மெ.டன் கொள்முதல் செய்வது என நுகர்பொருள் வாணிபகழகம் இலக்கு நிர்ணயித்து களத்தில் இறங்கியுள்ளது. ஆனால் சம்பா பயிரில் 80 சதவித அறுவடை பணிகள் முடிவுற்றுள்ள நிலையில் நேற்று முன்தினம் வரை 3 லட்சத்து56 ஆயிரம் மெ.டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 7லட்சம் இலக்கினை அடைந்து விட முடியுமா என்று கேட்டதற்கு, அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள் பல இடங்களில் விவசாயிகள் இன்னும் கொள்முதலுக்கு கொண்டு வராமல் உள்ளனர்.மேலும் தாளடி பயிரானது இன்னும் அறுவடைக்கு வரவில்லை. எனவே 7லட்சம் மெ.டன் கொள்முதல் நடைபெறும் என்று முழு நம்பிக்கை இருப்பதாக நுகர்பொருள் வாணிபகழக முதுநிலை மணடல மேலாளர் அழகிரிசாமி தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஜாதிக்காய்க்கு எப்போதும் சிறப்பான இடம் உண்டு**



பாட்டி வைத்தியத்தில் ஜாதிக்காய்க்கு எப்போதும் சிறப்பான இடம் உண்டு. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கன்னியாகுமரி, நெல்லை ஆகிய இடங்களில் ஜாதிக்காய் அதிகம் விளைகிறது. மலைச்சரிவுகளில் ஜாதிக்காய் மரங்கள் வளர்கின்றன. இந்த மரங்களில் மொத்தம் 80 வகைகள் இருக்கின்றன. இதில் ஒரு வகை மரம் சுமார் 25 அடி உயரம் வரை வளரக் கூடியது. பூக்கள் சிறியதாக இருக்கும். மஞ்சள் நிறத்தில் பூக்கும். நல்ல மணம் வீசும். ஆண்டுதோறும் பூத்துக்காய்க்கக் கூடியது ஜாதிக்காய் மரம். பேரிக்காய் அளவிற்கு இதன் பழம் இருக்கும். பழம் நன்றாக முற்றியபிறகு மஞ்சள் நிறமாக மாறிவிடும். பழத்தின் வெளிப்புறத் தோலை உடைத்தால் உள்ளே செந்நிறத்தில் சதைப்பகுதி தெரியும். இந்த சதைப்பகுதிக்கு ‘ஜாதிப்பத்திரி’ என்று பெயர். கொட்டையையும், அதனுள் இருக்கும் பருப்பையும் தான் ஜாதிக்காய் என்கிறார்கள். ஜாதிக்காய் மட்டுமின்றி மரத்தில் உள்ள இலைகளையும் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப் பயன்படுத்துகின்றனர். சூயிங்கம், மசாலாப் பொருட்கள், பற்பசை, உடலில் பூசக் கூடிய எண்ணைகள் தயாரிப்பில் ஜாதிக்காய்க்கு முக்கிய பங்கு உண்டு. இது அதிகம் பயன்படுத்தப்படுகிறது. ஜாதிக்காய் குழந்தைகளுக்கு பயன்படும் தலைசிறந்த மருத்துவப் பொருளாகத் திகழ்கிறது. அஜீரணக்கோளாறு, வயிற்று வலி போன்றவற்றை நீக்குகிறது. ரத்தத்தை சுத்தப்படுத்து

வதிலும் ஜாதிக்காய்க்கு பெரும் பங்கு இருக்கிறது. ஜாதி பத்திரி எனப்படும் சதைப்பகுதியை காய வைத்துப் பின்னர் பொடி செய்து உணவுப் பொருட்களுக்கு வாசனையூட்டப் பயன்படுத்துகிறார்கள். பெரும்பாலும் இவை பாக்குகளுடன் கலந்து தாம்பூல பொட்டலங்களாக தயாரிக்கிறார்கள். ஜாதிக்காய் சிறந்த நாட்டு மருந்து ஆகும்.

## <u>பெரம்பலூர் மாவட்டத்தில் 84 மெட்ரிக் டன் நெல்கொள்முதல் நுகர்பொருள் வாணிப கழகம் ஏற்பாடு</u>



பெரம்பலூர் மாவட் டத்தில் நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் 84 மெட்ரிக் டன் நெல்கொள்முதல் செய் யப்பட்டு உள்ளது.
நெல்கொள்முதல்நிலையங்கள்
இது தொடர்பாக பெரம் பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- பெரம்பலூர் மாவட்டத் தில்தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் வாயிலாக கலெக்டர் உத்தரவின்பேரில் காரீப் பருவம் 2014-15-ம் ஆண்டில் குன்னம் தாலுகா ஒகளூர்,நன்னை கிராமத் திலும், வேப்பந்தட்டை தாலுகா அரும் பாவூர், இனாம் அகரம் ஆகிய 4 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கடந்த மாதம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
84மெட்ரிக்டன்

இதுவரையில் 84 மெட்ரிக் டன் நெல்கொள்முதல் செய்யப் பட்டுள்ளது.கொள் முதல் செய்த நெல்லுக்கு இதுவரை ரூ.12 லட்சத்து 50ஆயிரம் வழங்கப்பட்டுள் ளது. நேரடிநெல்கொள்முதல் நிலையங்களில் மின்னணு எடைதராசு மூலம் எடை யிட்டு நெல்கொள்முதல் செய் யப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் தாங் கள்உற்பத்தி செய்த நெல்லுக்கு சரியான எடை கணக்கிட்டு, முழுமை யான விலையை பெற்றுக் கொள்ள முடிகிறது. ஏ-கிரேடு ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1470-ம், பொது ரக நெல் லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு

ரூ.1410-ம் வழங்கப் பட்டு வருகிறது. நெல்லுக்கு உண் டான தொகையை நேரடி நெல்கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்த அன்றே உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்படுகிறது. எனவே விவசாயிகள் அறு வடை செய்த நெல்லை நேரடி நெல்கொள்முதல் நிலையங் களில்விற்பனை செய்து பயன்அடையுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இவ் வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**<u>வெள்ளனூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை கலெக்டர் ஆய்வு</u>**



புள்ளம்பாடி ஒன்றியம் வெள்ளனூரில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை கலெக்டர் பழனிச்சாமி திடீரென ஆய்வு செய்தார்.

கலெக்டர்ஆய்வு

திருச்சி மாவட்டம் புள்ளம்பாடி ஒன்றியம் வெள்ளனூர் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே தற்காலிகமாக செயல்பட்டு வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நேற்று மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி திடீர் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் இதுகுறித்து கலெக்டர் தெரிவித்ததாவது;- திருச்சி மாவட்டத்தில் சம்பா சாகுபடி அறுவடையை ஒட்டி விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் தற்காலிக நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றது.

ஊக்கத்தொகை

அதன்படி கடந்த 9-ந்தேதி முதல் மாவட்டத்தில் 15 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் நெல் வரத்து அதிகமாவதையொட்டி விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு கூடுதலாக 18 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இன்று முதல் திறக்கப்பட உள்ளன. இவ்வாறு விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் நெல்லுக்கு சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,410

மற்றும் ஊக்கத்தொகை ரூ.60-ம் சேர்த்து ரூ.1,470 வழங்கப்பட்டு வருகிறது. பொது ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,360 மற்றும் ஊக்கத்தொகை ரூ.50-ம் சேர்த்து ரூ1,410 வழங்கப்பட்டு வருகிறது. கொள்முதலுக்கான தொகையை விவசாயிகளின் வங்கி கணக்கில் இசிஎஸ் மூலமாகவே வழங்கப்படுகிறது. 213 டன் நெல் கொள்முதல் அந்த வகையில், திருச்சி மாவட்டத்தில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் மூலம் 213 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் வெள்ளனூரில் மட்டும் 56 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப் பட்டுள்ளது. விவசாயிகள் நேரடி நெல்கொள்முதல் நிலையத்திற்கு கொண்டுவரும் நெல்லை தாமதமின்றி கொள்முதல் செய்ய வேண்டும். இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு அன்றே அதற்கான தொகை செலுத்தப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் சிற்றரசு, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பாண்டியராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**'விவசாயிகள் புதியன கண்டுபிடிக்க வேண்டும்': பத்மஸ்ரீ புதுவை வெங்கடபதி**



புதுச்சேரி மாநிலம் கூடப்பாக்கத்தை சேர்ந்தவர் வெங்கடபதி (68), இந்தியாவிலேயே முதலாவதாக, தோட்டக்கலை வல்லுநர் என்ற அடிப்படையில் பத்மஸ்ரீ விருதைப் பெற்றவர். இவர் படித்தது 4-ம் வகுப்புவரை மட்டும்தான். தோட்டக்கலை மீதான இவரின் தீவிர

ஆராய்ச்சிகளுக்காக, அமெரிக்காவைச் சேர்ந்த உலகத் தமிழ் பல்கலைக்கழகமும் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகமும் மதிப்புறு அறிவியல் முனைவர் பட்டத்தை இவருக்கு வழங்கியுள்ளன. தொடர்ந்து விவசாயம் சார்ந்த பல ஆராய்ச்சிகளில் இவர் ஈடுபட்டு வருகிறார். இந்த ஆராய்ச்சிகளுக்காகப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். அவருடன் ஒரு நேர்காணல்:

**நான்காம் வகுப்பு மட்டுமே படித்திருக்கிறீர்கள். இத்தனை விருதுகளைப் பெறுவோம் என்று எதிர்பார்த்தீர்களா?** எனக்கு ஆராய்ச்சி செய்யப் பிடிக்கும். 1972-ல் கனகாம்பரத்தில் ஆராய்ச்சி செய்து காமா கதிர்வீச்சு மூலம் நூறு வகை புதிய இனங்களை உருவாக்கினேன்.10 லட்சம் செடிகளை ஏழைக் குடும்பங்களுக்குத் தந்திருக்கிறேன். தென்னிந்திய பூச்சந்தைகளில் பல கோடி ரூபாய்க்கு இப்பூக்கள் விற்பனையாகி உள்ளன. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதையடுத்துச் சவுக்குக்கு மாறினேன். சவுக்கில் 200 டன் மகசூல் தரும் இனத்தை உருவாக்கி யிருக்கிறேன். கல்பாக்கம் அணுமின் நிலையம் உதவியுடன், வறட்சியில் வளம் கொழிக்கும் ரகத்தைக் கதிரியக்கம் மூலம் உருவாக்கினேன். உள்ளூர் சவுக்கு 40 டன்தான் மகசூல் தரும். புதிய ரகத்தில் அதைவிட நல்ல மகசூல் கிடைத்தது. இதுபோன்ற பணிகளைப் பாராட்டித்தான் விருதுகள் கிடைத்தன. **விவசாயிகளுக்கு ஆராய்ச்சி அவசியமா?**

விவசாயிகளுக்கு அறியாமைதான் எமன். ஈரப்பதத்தைப் பாதுகாக்க வேண்டியது அவசியம். நிலத்தடி நீர் குறையத் தொடங்கியுள்ளது. சொட்டு நீர் பாசனத்துக்கு மாறினால், முன்னேற முடியும் என்பதை உணர வேண்டும். அதற்கு ஆராய்ச்சி உதவும். நான்காம் வகுப்பு மட்டுமே படித்த என்னை ஆராய்ச்சி செய்ய ஊக்குவித்தவர், முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். அதன் மூலம் டி.என்.ஏ. எடுப்பது, மரபியல் பற்றியும் அறிந்துகொள்ள முடிந்தது. என்னோட ஆராய்ச்சி அறிக்கை

ஐ.நா. சபையில் வாசிக்கப்படும் தரத்துக்கு இருக்க வேண்டும் என்று உழைக்கிறேன்.

**தற்போது விவசாயம் இருக்கும் நிலையில் அனைவராலும் இது சாத்தியமா? இதற்குத் தடையாய் இருப்பது என்ன?**

தண்ணீர் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. நிலத்தடி நீர் குறைகிறது. விவசாய நிலங்கள், பிளாட்டாக மாறி வருகின்றன. இத்துறைக்கான நவீனத் தொழில்நுட்பங்களை விவசாயிகள் கற்றுக்கொண்டால் நீடிக்க முடியும். மரபணு மாற்றப்பட்ட விதைகள் அதிக மகசூல் தரும் என்பது என் அனுபவம். நமக்குத் தேவையான ஆராய்ச்சியை நாமே செய்யலாம். புதிய ரகங்களை அவர்களே உருவாக்க முடியும். வித்தியாசமான சிந்தனை விற்பனையாளர்களுக்கு மட்டுமல்ல, விவசாயிகளுக்கும் தேவை.

**கனகாம்பரம், சவுக்கு என்று உணவல்லாத பயிர்களில் நீங்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறீர்கள். உணவுப் பயிர்களில் ஆராய்ச்சி செய்திருக்கிறீர்களா?**

எனது மகள் ஸ்ரீ லட்சுமியுடன் இணைந்து நெய் மணம் கமழும் மிளகாய் வகையை உருவாக்கியுள்ளேன். புதுவை முதல்வர் ரங்கசாமி புதிய ரகத்தை வெளியிட்டார். கல்பாக்கம் அணுமின் ஆராய்ச்சி நிலையத்தின் உதவியும் இதில் முக்கியமானது. பத்தாயிரம் பேருக்கு மேல் இந்த வகையைத் தந்துள்ளேன். இந்த மிளகாயைப் பலரும் சாப்பிட்டுள்ளனர். தொடக்கத்தில் இம்மிளகாய்க்கு எதிர்ப்பு வந்தது.

**விவசாயத்தை மீட்டெடுக்க உங்கள் யோசனை என்ன?**

புதிய தொழில் நுணுக்கங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு பயிருடன் மட்டும் தேங்கிவிடக் கூடாது. குறைவான தண்ணீரைப் பயன்படுத்தும் உளுந்து, மற்றப் பயிர்களுக்கு மாற வேண்டும். வறட்சியான தர்மபுரி பகுதியில் மாமரம் வளர்த்து, பழச்சாறு எடுத்து ஏற்றுமதி செய்கின்றனர். அதைப்போல ஒவ்வொரு பகுதிக்கும் மாற்றுப் பயிர் குறித்துச் சிந்திக்க வேண்டும். நிலத்தடி நீர் குறைந்து, உப்புத்

தண்ணீர் புகுந்துள்ளது. அதில் வளரும் சவுக்கையும் உருவாக்கி யுள்ளோம். சுனாமிக்குப் பிறகு புதுச்சேரி - கடலூர் கடலோரப் பகுதிகளில் உப்பு தண்ணீர் அதிகமாகிவிட்டது. இப்பகுதிகளில் நாங்கள் உருவாக்கிய சவுக்கு ரகம் நன்றாக விளைகிறது. அதனால், மாற்றம் குறித்து யோசிக்க வேண்டும். ஒவ்வொரு விவசாயியும் கண்டுபிடிப்பாளராக மாற வேண்டும். விவசாயத்துக்கு என்றும் மதிப்புண்டு. *புதுவை வெங்கடபதி தொடர்புக்கு: 94432 26611*

**<u>ஆசிரியருக்குக் கைகொடுத்த கீரை: ஆண்டுக்கு ரூ. 2 லட்சம் வருமானம்</u>**



முழு நேரமும் நிலத்துடன் சேர்ந்து உழைத்து, மண்ணை நேசித்தால் உரிய பலன் கிடைக்கும் என்கிறார் கீரை சாகுபடியில் சாதிக்கும் உடுமலை முன்னாள் ஆசிரியர் விவசாயி த. பிரபாகரன் (29). திருப்பூர் மாவட்டம் உடுமலையில் இருந்து சுமார் 12 கி.மீ. தொலையில் உள்ள கிளுவன்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் ஆசிரியர் பிரபாகரனும், அவரது மனைவியும் இன்றைக்கு முழு நேர விவசாயிகள். தங்களுக்கு இருக்கும் சிறிய நிலத்துடன், கூடுதல் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கீரை விளைவித்து வருகின்றனர்.

**விவசாயம் நம்பகமானது**

விவசாயி த.பிரபாகரன் கூறுகையில், "நான் எம்.எஸ்.சி., பி.எட். முடித்துவிட்டு மாதம் ரூ. 4 ஆயிரம் சம்பளத்தில் தனியார் பள்ளியில் வேலை பார்த்தேன். சம்பளம் முழுவதும் போக்குவரத்து செலவுக்கே போய்விட்டது. குடும்பத்தைக் காப்பாற்ற முடியவில்லை. எங்களுக்குச் சொந்தமாக 3 ஏக்கர் நிலம் உள்ளது. விவரம் தெரிந்த நாள் முதல் பெற்றோருடன் விவசாயத்துக்குப் பாடுபட்ட நிலம் என்பதால், அந்த

மண்ணை நன்கு அறிந்திருந்தேன். எங்களது நிலத்தில் என்ன செய்யலாம் என்று யோசித்தபோது, கீரை நல்ல பலன் கொடுக்கும் என்று தெரியவந்தது. எனது மனைவி சிவகாமி (27) எம்.ஏ., பி.எட்., படித்திருக்கிறார். அவரும் ஆசிரியப் பணியை விட்டுவிட்டு விவசாயத்தில் அக்கறை காட்டினார். இருவரும் முழு நேரமாகக் கீரை சாகுபடியில் ஈடுபட்டுவருகிறோம்"என்கிறார்.

**நேரடிவிற்பனை**

ஆழ்குழாய் பாசனத்தை அதிகமும் நம்பியுள்ள இவர்கள் சிறு கீரை, மணத் தக்காளி, வெந்தயக் கீரை, பாலக் கீரை, அரைக் கீரை எனப் பல வகை கீரைகளைச் சாகுபடி செய்துவருகின்றனர். உடுமலையில் உள்ள உழவர் சந்தைக்குத் தினமும் நேரடியாகக் கொண்டு சென்று விற்பதால், நல்ல விலை கிடைக்கிறது. இவர்களிடம் மொத்த விலைக்கு வாங்கும் வியாபாரிகள் மூலம் திருப்பூர், கோவை, திண்டுக்கல் மாவட்டங்கள் உட்பட்ட பல்வேறு பகுதிகளுக்குக் கீரை விற்பனைக்காகக் கொண்டு செல்லப்படுகிறது.

**ரூ.2லட்சம்**

வருடத்தில் 6 மாதங்களுக்குப் பலன் தருகிற கீரை ரகங்களில் 6 முறை அறுவடை நடக்கும். ஒரு முறைக்கு 12,000 கட்டு கீரை கிடைக்கும். 6 முறைக்கு 72,000 கட்டுகளுக்குத் தலா ரூ.5 கிடைக்கும். அதனால் ஆண்டு வருவாய் சுமார் ரூ. 3 லட்சம் கிடைக்கும். இதில் ஆள்கூலி, அடியுரம், பராமரிப்புச் செலவுகளுக்காகச் சுமார் ரூ. 1 லட்சம்வரை செலவு பிடிக்கும். எஞ்சியது லாபம்தான் என்கிறார் பிரபாகரன். அடுத்ததாகக் கீரையுடன் பசுங்குடில் விவசாயம் மூலம் மலைக் காய்கறிகளைச் சாகுபடி செய்யத் திட்டமிட்டிருக்கிறார் பிரபாகரன். இவரைப் போலவே பலரும் இப்பகுதியில் கீரை சாகுபடி செய்துவருவதால், 'கிளுவன்காட்டூர் கீரை' சுற்றுவட்டாரத்தில் பிரபலமாகிவருகிறது. விவசாயி பிரபாகரனைத் தொடர்புகொள்ள: 9965351536

## <u>மல்லிகைப்பூ போன்ற நெல்</u>



தூயமல்லி நெல் ரகம் பாரம்பரிய நெல் வகைகளில் வித்தியாசமானது, சன்னமான ரகம். நெல், வெள்ளை கலந்த மஞ்சள் நிறமாகவும் தூய்மையாகவும் இருக்கும். அரிசி வெள்ளை நிறம். நெல்லை பார்த்தாலே அரிசியை அள்ளிச் சாப்பிட வேண்டும் என்பது போல், நெல் மணிகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அரிசி பளபளவென இருக்க வேண்டும். மிகவும் சன்னமாகவும் இருக்க வேண்டும் என்று இல்லத்தரசிகள் வழக்கமாக விரும்புவார்கள். அரிசி சீக்கிரமே வேக வேண்டும். வெந்த அரிசி சாதம், மல்லிகைப் பூவைப் போல் இருக்க வேண்டும். இப்படி மக்களின் பலதரப்பட்ட எதிர்பார்ப்புகளையும் ஈடேற்றும் தன்மை கொண்ட தூயமல்லி, மக்களை பெரிதும் கவர்ந்தது. இப்படி எல்லா குணங்களும் கொண்டு பாரம்பரிய நெல் வகைகளில் முதன்மை இடத்தைப் பிடித்துள்ளது தூயமல்லி. இந்த நெல்லின் அரிசி மட்டுமல்லாது தவிடும்கூட சத்து மிகுந்தது. நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. பலகார வகைகளுக்கும் பழைய சாதத்துக்கும் ஏற்ற ரகம். இதன் நீராகாரம் இளநீர் போன்று சுவையைத் தரக்கூடியது. தமிழ்நாட்டை ஆண்ட குறுநில மன்னர்கள் தூயமல்லி அரிசியை விரும்பி சாப்பிட்டதுடன், இந்த நெல் ரகத்தைப் பயிர் செய்ய உழவர்களுக்கு ஊக்கமளித்துள்ளனர். இந்த நெல்லை சாகுபடி செய்து அதிக மகசூல் எடுக்க, உழவர்களிடையே போட்டிகளை நடத்தி பரிசுகளும் கொடுத்திருக்கிறார்களாம். *நெல் ஜெயராமன் தொடர்புக்கு: 94433 20954.*